2. இமாம் மாலிக் (ரஹ்)

“நான் மதீனாவில் எங்குமே வாகனத்தில் ஏறிப்போக மாட்டேன். ஏனெனில், இதே வீதிகளில் தான் எம்பெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கால்நடையாக நடந்து சென்றிருக்கிறார்கள்” என்று கூறி ஆட்சியாளர் ஒருவர் அனுப்பிய வாகனத்தை ஏற்க மறுத்த உத்தம சீலர்.

கல்வி போதிக்கத் தமது மாளிகைக்கு வருமாறு கலீபரசர் அழைத்தபோதிலும், “மக்கள் கல்வியை நாடிச் செல்வார்களேயன்றி, கல்வி ஞானம் மக்களைத் தேடிப் போகாது” என்று கூறி மறுத்த உத்தமர்.

தாம் அளித்த தீர்ப்பொன்றைச் சுயநலமே உருவான அரசியலார் மாற்றச் சொல்லி, நயத்தாலும், பயத்தாலும், வற்புறுத்தியும் மாற்ற மறுத்து, எழுபது கசையடிகளை ஏற்றும் மனம் தளராது தமது தீர்பையே உறுதி செய்த மன உறுதியாளர்.

மதீனாவின் மாபெரும் முஹத்திஸ் ஆகவும், பகீஹ் ஆகவும் விளங்கிய உத்தமசீலர்.

இவர்கள்தாம் இமாம் மாலிக் ஆவார்கள். ஒரு சர்வ கலா சாலையாக விளங்கிய தனி மனிதர். துறவு வாழ்வில் திளைத்த தூயவர். மதீனாவின் மகத்துவத்தைப் பேணிய மாமேதை.

மாலிக் இமாமவர்களின் இடுகுறிப் பெயர் அபூ அப்துல்லாஹ்; பட்டப் பெயர் இமாம் தாருல் ஹிஜ்ரத்.

பிறப்பும், கல்வியும்

இவர்கள் முழுக்க முழுக்க அரபி மரபைச் சேர்ந்தவர்களாவர். இஸ்லாத்துக்கு முன்னும், பின்னும் இவர்களுடைய குடும்பம் மிகவும் பிரபலமாக விளங்கியதாகும். இமாமவர்களின் முன்னோர்கள் யமன் பகுதியில் வாழ்ந்தவர்கள். இஸ்லாம் தோன்றிய பின்னர் இவர்கள் மதீனாவில் வந்து குடியேறினர். இமாமவர்களுடைய வம்சாவளி வருமாறு :

மாலிக் பின் அனஸ் பின் மாலிக் அபீ ஆமீர் பின் அம்ரு பின் ஹாரிஸ் பின் சீமான் பின் குதைல் பின் அம்ரு பின் அல் ஹாரிதுல் அஸ்பாஹி. இமாமவர்கள் 'ஹிம்யர்' என்ற உயர் குடியைச் சேர்ந்தவர்கள்.

இமாம் மாலிக்கின் தந்தையின் பாட்டனாரான அபூ ஆமிர் ஹிஜ்ரி இரண்டில் இஸ்லாத்தைத் தழுவியவராவார்கள்.

ஹிஜ்ரி 93இல் இமாமவர்கள் பிறந்தார்கள். அப்போது தமாஸ்களில் உமைய்யா கலீபா வலீத் பின் அப்துல் மலிக் ஆட்சி செலுத்திக் கொண் டிருந்தார். இஸ்லாமிய ஆட்சி கிழக்கிலும் மேற்கிலும் உன்னதமாகப் பரவியிருந்த சமயமாகும்.

மதீனாவிலுதித்த இமாம் மாலிக், கல்வி பயிலத் தேவையான சகல வசதிகளையும் அடையப் பெற்றிருந்தார்கள். கல்வி மணம் திகழ்ந்த புனித பூமியான மதீனா, மாமேதைகள், மகான்கள் தோன்றும் சுரங்கமாகவே திகழ்ந்தது. அங்கிருந்து நூற்றுக்கணக்கான ஸஹாபாக்கள் இஸ்லாத்தைப் பரப்புவதற்காக உலகின் பல பகுதி களுக்கும் போய்விட்டார்களாயினும், பின்னும் தங்கம் விளையும் சுரங்கமாகவே அது திகழ்ந்தது. நபி பெருமானார் புனித உடல் நீத்தபின், இருபத்தைந்து ஆண்டுகள் இஸ்லாமிய ஆட்சியின் தலைமைப் பீடமாகவே அது மிளிர்ந்தது. இஸ்லாமிய ஆட்சிக்கான சட்ட திட்டங்களை வகுத்துத் தந்த ஸஹாபாக்களின் சட்டசபை அங்குதான் கூடி வந்தது. அங்கு உருவான சட்ட திட்டங்களும், ஃபிக்ஹு மஸ்அலாக்களும் முஸ்லிம் உலகம் எங்கும் பரவி யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

ஷரீஅத்தின் புனிதமான அகமியங்களின் மூலம் போன்று விளங்கிய ஹஜ்ரத் அபூபக்கர், உமர், ஆயிஷா (ரலி-அன்ஹும்), நபி பெருமானாரின் மெய் வணக்கங்களையும், முன்மாதிரியையும் அணு வளவும் பிசகாது கடைப்பிடித்து மகிமை பெற்றிருந்த ஹஜ்ரத்

அப்துல்லாஹிப்னு உமர், 'இந்த உம்மத்தின் மூளை' எனச் சிறப்புப் பெயர் பெற்ற ஹஜ்ரத் இப்னு அப்பாஸ், ஏராளமான நாயக மொழிகளை வெளியிட்ட ஹஜ்ரத் அபூ ஹுரைரா, திருக்குர்ஆன் 'வஹி' இறங்கியதை அவ்வப் போது, உடனுக்குடன் எழுதி வைத்துப் பாதுகாத்து வந்த 'காத்திபுல் வஹி' ஜைது பின் தாபித் போன்ற மாமேதைகள் எண்ணற்ற அறிஞர்களை ஆக்கி வெளியில் அனுப்பிக் கொண்டிருந்தனர்.

இவர்கள் காலமான பின்னர் ஹிஜ்ரி 94-இல் அபூபக்கர் பின் ஹாரிதும், ஹிஜ்ரி 99-இல் காரிஜா பின் ஜைதும், ஹிஜ்ரி 101-இல் காஸிம் பின் முஹம்மதும், சயீது பின் முஸய்யிபும், ஹிஜ்ரி 107-இல் சுலைமான் பின் யஸாரும் ஆகிய ஏழு மாபெரும் பகீஹுக்கள் மதீனா நகரிலிருந்தே கலைஞானம் பரப்பினர்.

எனவே, இமாம் மாலிக் அவர்கள் கல்வியில் கருத்துக் காட்டியபோது எண்ணற்ற மாமேதைகளிடமிருந்து கலாஞானங்களை அள்ளிச் சேகரிக்க முடிந்தது. இவ்விதம் அள்ளிச் சேகரித்த செல்வங்களை எல்லாம் தங்கள் இதயப் பொட்டகத்தில் அடைத்து விட்டார்கள். இதனால், அவர்கள் 'இமாம் தாருல் ஹிஜ்ரத்' என்று பட்டம் பெற்றார்கள்.

இமாமவர்களின் பாட்டனார், தந்தையார், சிறிய தகப்பனார் ஆகிய அனைவருமே ஒப்பற்ற முஹத்திஸ்களாய் இருந்ததால் தொடக்கத்தில் இமாமவர்கள் இவர்களிடமே கல்வி பயின்றிருக்கிறார் கள். பின்னர், திருக்குர்ஆனை காரீ அபூ ரதீம் நாபிய்யிய்யி (இவர்களுடைய கிராஅத் முறைதான் இன்று இந்திய முஸ்லிம்கள் பெரும்பாலோரால் ஓதப்படுவதாகும்) அவர்களிடமும், ஹதீஸ்களை ஷிஹாபுத்தீன் ஜஹ்ரி, ஜஃபருஸ் ஸாதிக் (ரலி), முஹம்மது பின் யஹ்யா, அபூ ஹாஜிம், யஹ்யா பின் சயீத் போன்ற பெரியார்களிடமும் பாடம் கேட்டார்கள். பிக்ஹுப் பாடங்களை ராபிஅத்துர் ரை அவர் களிடமும் கற்றுள்ளார்கள்.

இமாமவர்கள் கல்வியில் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தும், சுயமே தீர்ப்புக்கள் வழங்குமுன் சுமார் அறுபத்தாறு பெரியார்களிடம் அனுமதி பத்திரம் பெற்றுள்ளதாக அவர்களே தெரிவிக்கிறார்கள். மிகவும் இளமையான வயதிலேயே (அதாவது சுமார் 30-35இல்) அவர்கள் கலா ஞானப் போதனை செய்யவும், மார்க்கத் தீர்ப்புக்கள் வழங்கவும் தொடங்கிவிட்டார்கள்.

எம்பெருமானாரின் முன்மாதிரியை முழுக்க முழுக்கப் பின்பற்றி யொழுகிய ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு உமர், பெருமானாருக்குப் பின்னர் ஏழு ஆண்டுகள் ஹதீஸ் ஃபிக்ஹுப் பாடங்களையும், மார்க்கத் தீர்ப்புக்களையும் வழங்கிக் கொண்டிருந்தார்கள். இமாம் மாலிக்கின் கிராஅத் ஆசிரியர் நாபிஇய்யே அமர்ந்து பாடம் நடத்தினார்கள். இவர்களும் காலமானபின் மக்கள் இமாம் மாலிக்கை அந்த ஸ்தானத்தில் அமர்த்திவிட்டனர். (இவ்விதம் அவர்கள் இருபத்தைந்து, இருப்பத்தாறாம் வயதிலேயே ஆசானாக ஆகிவிட்டார்கள் என்று சிலர் கூறுகின்றனர். எனினும், ஹதீஸ் விளக்க மன்றங்களிலிருந்து பாடம் கேட்க மாணவருக்கு குறைந்தபட்சம் இருபது வயதாவது ஆகியிருக்க வேண்டும் என்று மதீனாப் பெரியார்கள் நிபந்தனையொன்றை உண்டாக்கியிருந்தார்கள். ஆனதால், இமாமவர்கள் கல்வி கற்று, தேர்ச்சியடைந்து பாடம் நடத்த ஆரம்பிக்க அதிலிருந்து சுமார் பத்து ஆண்டுகளாவது ஆகியிருக்க வேண்டும்.)

இமாமவர்களின் கலாஞான மன்றம்

இமாமவர்கள் ஹதீஸ், பிக்ஹுப் பாட போதனையளிப்பதற்கென ஒரு மன்றத்தை நிறுவிக்கொண்டார்கள். உலகப் புகழ் பெற்றுவிட்ட இந்த மன்றத்துக்கு உலகின் சகல பாகங்களிலுமிருந்தும் மாணவர்கள் வரலாயினர். கிழக்கே சீஸ்தான், மேற்கே முஸ்லிம் ஸ்பெயின் ஆகிய இரண்டு எல்லைகளுக்கும் உட்பட்ட நூற்றுக்கணக்கான ஊர்களி லிருந்து மாணவர்கள் வரலாயினர். அவர்களுடைய கலாமன்றத்தில்

கூடிய மாணவர்களுடைய தொகையைக் கவனித்தால் அந்த மன்றம் ஒரு தனி மனிதர் நடத்திய சர்வ கலா சாலையாகவே மிளிர்ந்தது எனலாம். அதிலும், ஹஜ்ஜுக் காலங்களில் கணக்கற்றவர்கள் அவர்களுடைய ஹதீஸ் வகுப்புக்களில் வந்து அமர்ந்து பாடம் கேட்பர். எத்தனையோ சிக்கலான பிரச்சினைகளுக்கும் முடிவு தேடிப் பலர் அவர்களிடம் வருவர்.

இமாம் அபூ ஹனீபாவைப் போலவே, இமாம் மாலிக்கும் நபிபெருமானார் (ஸல்) அவர்களால் முன்னறிவிப்புச் செய்யப் பட்டவர்களாக விளங்குகிறார்கள். "அண்மையிலேயே ஒரு காலம் வரும்; அப்போது மக்கள் கலாஞான வேட்கையால் உந்தப்பட்டுத் தங்கள் ஒட்டகங்களை (ப்பல திசைகளிலும்) ஓட்டுவார்கள். எனவே, (அப்போது அவர்களுக்கு) மதீனாவின் ஒரு கலாஞானியைவிட வேறு யாரும் பெரிய மேதையாகக் கிடைக்கமாட்டார்கள்" என்று எம்பெருமானார் அருளியுள்ளதாக அபூஹுரைரா (ரலி) தெரிவித்துள்ள ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள 'மதீனாவின் கலாஞானி' இமாம் மாலிக் அவர்களே என்பது உலமாக்கள் கருத்தாகும். "திருக்குர்ஆன், ஹதீஸ் கலையை அறிந்தவர்களில், இமாம் மாலிக்கை விட, அதிகம் அறிந்தவராக நான் யாரையும் காணவில்லை" என்பது இமாம் அபூ ஹனீபாவின் அபிப்பிராயமாகும். எனவே பெருமானாரின் தீர்க்க தரிசனப்படி, ஆயிரக்கணக்கானவர்கள் ஒட்டகங்களிலேறி இமாமவர்களைத் தேடி வந்ததிலும் வியப்பில்லை.

இவ்விதப் பெருமைக்குரிய இமாமவர்களின் கலைஞான மன்றம் எவ்வாறு விளங்கிற்று என்பதைச் சிறிது கூறலாம். இமாமவர்களின் கலாஞான மன்றம் எப்போதும் பரிசுத்தமான முறையில் பாராமரிக்கப்பட்டு வந்தது. அதில் உயர்தர விரிப்புக்கள் விரிக்கப் பெற்றிருக்கும். மன்றத்தின் நடுவே இமாமவர்கள் அமர்வதற்கான ஆசனம் அமைக்கப்பட்டிருக்கும் சுற்றிலும்

மாணவர்களும், பிரமுகர்களும் அமர்வதற்கு வசதி செய்யப்பட்டு, விசிறிகள் கூட வைக்கப்பட்டிருக்கும். போதனை தொடங்குமுன் வாசனைப் புகையும், வத்தியின் மணமும் யாவரையும் பரவசத்தில் ஆழ்த்தும். மாணவர்கள் சுத்தமான உடையுடன், ஒலுவுடன் வந்து அமருவர். விரிப்பின்மீது எங்கும் ஒரு தூசியைக்கூடக் காணமுடியாது. ஹதீஸ்களைப் போதிக்கவும், விளக்கம் தரவும் வரும் இமாமவர்கள், குளித்து முழுகிவிட்டு, தலையையும், தாடியையும் சீப்பினால் வாரிக் கொண்டு, சிறப்பான தூய உடையுடுத்தி, தலைப்பாகையணிந்து, அத்தர் போன்ற வாசனைகளைச் சற்று அதிகமாகவே பூசிக்கொண்டு, இரண்டு ரகஅத் தொழுது விட்டு வந்து சபையில் அமருவார்கள். அவர்கள் தங்கள் ஆசனத்தில் அமரும்போது, யாவரும் மிகுந்த பணிவுடன் தலையைத் தொங்கப்போட்டுக் கொள்வார்கள். உடனே, சபையில் ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம் நிலவும். மிகவும் உணர்ச்சி வசமானவர்களாக இமாமவர்கள் ஹதீஸ் விளக்கம் செய்வார்கள். நபிபெருமானாரைப் பற்றிப் பேசும்போது, அவர்களின் நிறம் மாறி, உடல் ஒடுங்கும். "அச்சமயத்தில், நான் காண்பதை நீங்கள் காண்பீர்களாயின் என்மீது குறை கூற மாட்டீர்கள்" என்று பின்னர் தங்கள் அன்பர்களிடம் அவர்கள் கூறியதுண்டு.

இமாம் மாலிக் அவர்கள் ஹதீஸ் பாடம் நடத்தும்போது யாரேனும் இரைந்து பேசினால் கூட அவர்களால் தாங்க முடியாது. உடனே அவர்களை நோக்கி, ''விசுவாசிகளே, உங்கள் சப்தத்தை உங்கள் நபியுடைய சப்தத்துக்கும் மேலாக உயர்த்தாதீர்கள்!'' என்ற கருத்துள்ள ஆயத்தை ஓதிக்காட்டுவார்கள். அதாவது நபி பெருமானாரின் திருமொழிகளைப் பற்றிய விளக்கம் கொடுக்கும் போது, தன் சப்தத்தை உயர்த்துபவன் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் மரியாதையின்றித் தன் சப்தத்தை உயர்த்தியவனாவான் என்பது அதன் விளக்கமாகும் என்று கூறுவார்கள்.

ஒரு சமயம் இமாமவர்கள் சபையில் பாடம் நடத்துவதைக் கண்ட கவிஞர் ஒருவர், சபையின் ஒழுங்கையும், இமாமவர்களின் மேதையையும், மரியாதையையும் கண்டு பாட்டொன்று எழுதினார். அதில்,

கேட்போரின் கேள்விகளுக்கு
இமாமவர்கள் உடனுக்குடன் விடை தராவிடினும்,
சபையில் நிலவிய காம்பீர்யம் காரணமாகக்
கேட்டவர் மீண்டும் விளக்கம் கேளாமலே
மௌனமாகத் தலைகுனிந்து அமர்ந்திருக்கிறார்.

அரச அவைக்குரிய மரியாதை
அங்கே மிளிர்கிறது
யாவரும் பயபக்தியால் ஆட்கொள்ளப்பட்டுள்ளனர்.

இமாமவர்கள் ஓர் அரசர் அல்லர்தாம்;
எனினும், அவர்களுக்கு அரசரைவிடவும்
அதிக மரியாதையும், பணிவும் காட்டப்படுகின்றன.

அவர்கள் அவையிலே மாமன்னரெல்லாம்
தலைகுனிந்து, வாய்மூடிப் பணிவுடன் அமர்ந்துள்ளனர்

என்று குறிப்பிட்டுள்ளார்.

இமாமவர்களும், அரசியலும்

இமாம் அபூ ஹனீபாவைப்போலவே, இமாம் மாலிக்கும் பல கலீபாக்களின் ஆட்சியைக் கண்டவர்களாவர். உமைய்யாக்கள், அப்பாஸியாக்கள் என்ற இரண்டு பரம்பரையினரின் ஆட்சி யாளர்களிலும் பலர் ஆளுவதை அவர்கள் கண்டார்கள். அவர்கள் பிறக்கும்போது வலீத் பின் அப்துல் மலிக் என்ற உமைய்யாக் கலீபா ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தார். அவர்களுடைய பன்னிரண்டாம் வயதில் ஹிஷாம் கலீபாவானார். இமாமவர்களின் முப்பத்து

இரண்டாம் வயதுவரை ஆட்சி செலுத்திய இந்த ஹிஷாம் ஹிஜ்ரி 125இல் காலமாகி, இரண்டாம் வலீது கலீபாவானார். இவர் மறு வருஷமே கொலை செய்யப்பட்டு விடவே, மூன்றாம் யஜீது கலீபாவானார். ஆறாம் மாதத்தில் அவர் காலமாகவே, உமையாக் களின் ஆட்சி சரிந்து விட்டது. இவ்விதம் அவர்கள் நாற்பது வயதடையுமுன் ஆறு உமைய்யாக் கலீபாக்கள் மாண்டு மறைந்து, அவர்களுடைய பரம்பரையும் மறைந்துவிட்டது.

ஹிஜ்ரி 132-இல் தொடங்கிய முதல் அப்பாஸியாக் கலீபா அபுல் அப்பாஸின் ஆட்சி நான்கு வருடங்கள் நடைபெற்றது. அடுத்து அவர் சகோதரர் அபூ ஜஃபருல் மன்ஸூர் ஹிஜ்ரி 136-இல் கலீபாவானார். அப்பாஸியாக்கள் பதவியைக் கைப்பற்றும்வரை, ஏன், அதற்குப் பின்னரும் கூட இவர் மதீனாவிலேயே வாழ்ந்திருந்தார். அங்கே, சாதாத்துகள் கூடி ஹஸனின் பௌத்திரர்களுள் ஒருவரான முஹம்மது (நப்ஸுஸ் ஜகிய்யா) என்பவரைக் கலீபாவாகப் பிரகடனம் செய்தபோது, இவரும் அந்தக் கூட்டத்தில் பிரசன்னமாகவிருந்து, அவரிடம் விஸ்வாசப் பிரமாணம் செய்துகொண்டார், ஆனால், பின்னர் இவர் தமையனார் கிலாபத்தைக் கைப்பற்றவே, இவர் தாம் கொடுத்த வாக்குறுதியை மறந்துவிட்டார்! முஹம்மது (நப்ஸுஸ் ஜகிய்யா) இவருக்கு எதிராக மக்காவில் கலகக்கொடி உயர்த்தி, ஆட்சியைக் கைப்பற்றினார். இவரை அடக்க மன்சூர் பெரிதும் கஷ்டப்பட நேர்ந்தது. எனவே, முதலில், நப்ஸுஸ் ஜகிய்யாவின் ஆதரவாளர்களுக்கு, அச்சமயம் மதீனாவில் நன்கு செல்வாக்குப் பெற்றிருந்த இமாம் மாலிக் மூலம் ஒரு வேண்டுகோள் அனுப்பினார்.

அதாவது, இந்த நப்ஸுஸ் ஜகிய்யாவையும், அவர் சகோதரர் இப்ராஹீமையும் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டார். அத்துடன், இமாம் மாலிக்கிற்குத் தனியாக ஒரு கடிதமெழுதி, அந்தக் கலகக்காரர்கள் இரு வரையும் அவர்கள் பிடித்துத் தம்மிடம் அனுப்புவதாயின் அந்தக் கலகக்காரர்களுடைய தகப்பனரான

அப்துல்லாஹ்வின் பெரிய சொத்து முழுமையும் இமாமவர்களுக்கே கொடுத்து விடுவதாகவும் எழுதினார். அதற்கு இமாமவர்களோ, நீதியை விட்டுப் பிறழ மறுத்து விட்டார்கள். மன்சூர் யாரைக் கலீபாவாக ஒப்புக் கொண்டு விசுவாசப் பிரமாணம் செய்தாரோ, அதே நபரைத் தூக்கிலிடத் தாம் உதவ இயலாது என்று அவர்கள் கூறிவிட்டார்கள். அத்துடன் உண்மையிலேயே, கிலாபத், நப்ஸுஸ் ஜகிய்யாவுக்கே உரியதாகும் என்ற தங்கள் அபிப்பிராயத்தையும் அவர்கள் பிரகடனப்படுத்தினார்கள்.

அவரிடம் மக்கள் விசுவாசப்பிரமாணம் செய்து கொடுக்கலாம் என்றும் அறிவித்தார்கள். இது கேட்ட மதீனாவாசிகள் ஒன்று திரண்டு இமாமவர்களிடம் வந்தனர். "நாங்கள் மன்சூரிடம் விசுவாசப்பிரமாணம் செய்து கொடுத்து விட்டோமே, இப்போது என்ன செய்வது?" என்று வினவினர். அதற்கு இமாமவர்கள், "மன்சூர் உங்களிடம் பலவந்தமாகப் பிரமாணம் வாங்கியிருக்கிறார். இவ்வாறு கட்டாயப்படுத்தி வாங்கப்படும் பிரமாணம் செல்லாது" என்று கூறி, அதற்கு ஆதாரமாக, "வற்புறுத்தி வாங்கப்படும் 'தலாக்' செல்லாது" என்ற ஹதீஸையும் சுட்டிக் காட்டினார்கள். உடனே, மதீனாவாசிகள் முழுமனத்துடன் நப்ஸுஸ் ஜகிய்யாவை ஆதரித்து நின்றனர். ஆனால், கலீபா மன்சூர் அனுப்பிய பெரும் படை நப்ஸுஸ் ஜகிய்யாவின் படையை நசுக்கி அவரையும் கொன்றுவிட்டது. அவர் சகோதரர் இப்ராஹீமும் வேறு ஒரு போர்க்களத்தில் கொல்லப்பட்டார்.

இதன்பின் கலீபா மன்சூர் தன் ஒன்றுவிட்ட சகோதரர் ஜஃபர் என்பவரை மதீனாவில் தன் பிரதிநிதியாக நியமித்து அனுப்பியதுடன், இமாம் மாலிக் போன்ற உலமாக்களைக் கவனமாகக் கண்காணித்து வருமாறும், அவர்கள் தமது ஆட்சிக்கு விரோதமாக மேலும் இடைஞ்சல் உண்டாக்கினால் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறும் கூறியிருந்தார். இதனால், ஜஃபர் மதீனா வந்ததும், மக்களிடம் மீண்டும் புதிதாக விசுவாசப்பிரமாணம் பெறத்

தொடங்கினார். அத்துடன், இவர் இமாம் மாலிக் அவர்களை அணுகி, "வற்புறுத்தி வாங்கப்படும் தலாக்குச் செல்லாது என்ற உங்கள் தீர்ப்பை மாற்றி அது செல்லும் என்று தீர்ப்புக் கொடுங்கள்" என வற்புறுத்தினார். இமாமவர்கள் அதற்கு இணங்க மறுத்துவிட்டார்கள்; ஹதீஸுக்கு மாற்றமாகத் தான் தீர்ப்பளிக்க முடியாது என்று கூறிவிட்டார்கள்.

இமாமவர்களின் பிடிவாதம் இந்த ஜஃபருக்கு அதிக ஆத்திரத்தைக் கிளப்பி விட்டது. அரச தண்டனை உண்டாகும் என்ற அவருடைய மிரட்டலும் இமாமவர்களை அசைக்க முடியவில்லை. எனவே அவர் களுக்கு எழுபது கசையடி கொடுக்கப்பட வேண்டும் என்று அவர் உத்தரவிட்டார். உடனே அவருக்குக் கீழிருந்த அதிகாரிகள் இமாமவர்களை ஒரு குற்றவாளியைப் போல் இழுத்துச் சென்று, கசையடி கொடுப்பதற்கென்று ஏற்பட்ட இடத்தில் நிறுத்தி, அவர்களுடைய சட்டையை அகற்றிவிட்டு எழுபது அடிகள் அடித்தனர். இதனால், இமாமவர்களின் உடல் முழுவதும் இரத்தம் பெருகி ஓடலாயிற்று. இமாமவர்களின் இரண்டு கைகளும் தோள் பொறுத்தை விட்டும் கீழே இறங்கிவிட்டன. இந்தக் கொடுமை காணாதென்று, இமாமவர்களை அதே கோலத்தில் ஒட்டகத்தின் மீது ஏற்றி வீதி வீதியாக இழுத்துச் சென்றனர். அப்போதெல்லாம் இமாமவர்கள், இரத்தக் கோறையால் இனம் காண இயலாதிருந்த தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வது போல், "நான்தான் மாலிக்கிப்னு அனஸ்" என்று கூறிக் கொண்டு, "வற்புறுத்தி வாங்கப்படும் தலாக் செல்லாது என்றுதான் நான் இப்போதும் தீர்ப்பளிக்கிறேன்" எனவும் பிரகடனம் செய்தார்கள். கடைசியில் அரசாங்கச் சிப்பந்திகள் அவர்களை மஸ்ஜிதுந் நபவியில் விட்டுப் போயினர். இமாமவர்கள் தங்கள் உடலைக் கழுவிவிட்டு, அங்கே இரண்டு 'ரக்அத்' நபில் தொழுதார்கள். பின்னர், "சயீத் பின் முஸய்யிபும் சாட்டையடி வாங்கி கொண்டபின் இங்கே வந்து இரண்டு ரக்அத் தொழுதார்கள்" என்று கூறினார்கள். இந்தத் தண்டனையால்

இமாமவர்களின் மனஉறுதியை உலகமே உணர்ந்து கொண்டது. கலீபா மன்சூரும் கூட அவர்களுக்குப் பணிந்துபோக நேர்ந்தது. (இது நிகழ்ந்தது ஹிஜ்ரி 147இல் என்று சொல்லப்படுகிறது.)

இந்தச் சம்பவம் நடந்த வருடம் கலீபா மன்சூர் ஹஜ்ஜுக்கு வந்தவர், மதீனாவிலும் வந்து தங்கினார். அவர் வருகை தந்தால் நகரின் பிரமுகர்கள் நகருக்கு வெளியிலேயே வந்து அவரை வரவேற்க வேண்டும் என்பது சம்பிரதாயம். இவ்விதம் அவரை வரவேற்கச் சென்றவர்களோடு, நகரில் முக்கியஸ்தராக விளங்கிய இமாம் மாலிக் அவர்கள் போகவில்லை. கலீபா தமது மாளிகையில் இறங்கியபின், நள்ளிரவாகிவிட்ட நிலையிலும், அதுவரை தன்னை வந்து கண்டு போகாத இமாம் மாலிக், இப்னு ஸம்ஆன், இப்னு அபீதிஃபு ஆகியோர்களைத் தம்மிடம் அழைத்து வருமாறு உத்தரவிட்டார். இமாம் மாலிக் இந்த உத்தரவைக் கேட்டதும் தங்களுக்கு இறுதிக் காலம் வந்துவிட்டதாகவே முடிவு செய்தார்கள். ஏனெனில், கலீபா மன்சூரின் வேண்டுகோள்படி, நப்ஸுஸ் ஜகிய்யா சகோதரர்களை, அவர்கள் மன்சூரிடம் ஒப்படைக்க மறுத்திருந்தார்கள். இரண்டாவதாக, மன்சூரிடம் மக்கள் செய்து கொடுத்த விசுவாசப் பிரமாணமே செல்லாது என்ற ரீதியில் தீர்ப்பும் கொடுத்து விட்டார்கள். கலீபாவின் பிரதிநிதியான ஜஃபர் எவ்வளவோ முயன்றும், அந்த முடிவை மாற்ற மறுத்து, கசையடி தண்டனையையும் ஏற்றுக் கொண்டார்கள். இப்போதாவது கலீபா நகருக்கு வருகை தருகையில் அவரை எதிர்சென்று அழைக்கப் போயிருக்கலாம். போகவில்லை. எனவே, மன்சூர் தங்கள் தலையைச் சீவ உத்தரவிடத்தான் தங்களை அழைத்துள்ளார் என்று முடிவு கட்டிவிட்டார்கள். உடனே குளித்து, மையித்துக்கு அணிவிக்கும் கபனை அணிந்து கொண்டு, மரணிக்கப்படுமுன் மரணித்தவர்களாக மன்சூரின் சபையை நோக்கிச் சென்றார்கள்.

அங்கே மன்சூர் முதலில் மற்ற இரண்டு உலமாக்களையும் கண்டு பேசியபின், இமாம் மாலிக் அவர்களுக்குப் பேட்டியளிக்க அவர்களை உள்ளே அழைத்தார். அவர்கள், அவருடைய சபையுள் வந்தார்கள். யாவரும் செய்யும் வழக்கப்படி அவர்கள் அவர் கையை முத்தமிடவுமில்லை. அவர் அவர்களை நோக்கி, "அபூ அப்துல்லாஹ், என்ன உங்கள் உடை ஒரு மாதிரியானதாக இருக்கிறது? ஏன் உங்கள் மீதிருந்து 'ஹனூத்தின்' (மையித்துக்கு மேலே தூவும் ஒருவகை வாசனைத் தூள்) மணம் வீசுகிறது?" என்று கேட்டார்.

"எனக்கு இப்படி நள்ளிரவில் நீங்கள் அழைப்பு விடுத்ததும், எனக்கு இது இறுதி நாளாக இருக்கலாம் என்று நானே முடிவு செய்தேன். எனவே, என் இறுதிப் பிரயாணத்துக்கான ஆயத்தங் களுடன், மையித்தின் உடையை உடுத்திக் கொண்டு வந்து விட்டேன்" என்று இமாமவர்கள் கூறியதும், மன்சூர் துடிதுடித்தார். "ஹா, சுப்ஹானல்லாஹ்! அபூ அப்துல்லாஹ், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? இஸ்லாத்தின் தூணை நான் என் கையாலேயா இடித்துத் தள்ளுவேன்!" என்று கூறி மிகவும் வருந்தினார்.

இமாமவர்கள் தண்டனையடைந்ததைக் கேள்வியுற்று, தான் மிகவும் வருந்தியதாகவும், அதற்கு நேரில் மன்னிப்புக் கேட்க விரும்பியதாகவும், அதனாலேயே வந்தவுடன் முதல் வேலையாக அவர்களை அழைத்துவர உத்தரவிட்டதாகவும் கலீபா தெரிவித்தார். மேலும், அவர்களை அடிக்க உத்தரவிட்ட அதிகாரி ஜஃபரைப் பதவி நீக்கம் செய்து விட்டதாகவும், அவர்கள் எப்படி விரும்புகிறார்களோ அப்படித் தாம் அவரைத் தண்டிக்கத் தயாராக இருப்பதாகவும் மன்சூர் இமாமவர்களிடம் தெரிவித்தார். இமாமவர்களோ, அவர்மீது தமக்கு எந்தவித ஆத்திரமும் இல்லையென்றும், அவர் நபிபெருமானாரின் வமிசத்தைச் சேர்ந்தவர் என்ற ஒரு காரணத்துக்காகவாவது, தாங்கள் அவரை மன்னித்தே தீரவேண்டியதுள்ளதென்றும், மறுமையில் இந்த மகிமைமிக்க குடும்பத்தைச் சார்ந்த ஒருவரைத் தமது எதிரியாக நிறுத்திக் கொண்டு அவர் முகத்தில் தங்களால் விழிக்க முடியாதென்றும் தெரிவித்தார்கள்.

உடனே கலீபா மன்சூர், "அபா அப்துல்லாஹ், நீங்கள், உயிரோடிருக்கும் வரை ஹரமைன் (மக்கா, மதீனா) மக்களுக்கு நீங்கள்தான் தலைவராயும் வழிகாட்டியாயுமிருப்பீர்கள் உங்களுக்குத் (தெரியாத்தனமாக) அளிக்கப்பட்ட தண்டனையின் காரணமாக இங்குள்ளவர்கள் பாதுகாப்புப் பெற்றுவிட்டனர்" என்று கூறினார். இமாமவர்களோடு நீண்ட நேரம் அளவளாவியபின் அவர் அவர்களைத் தக்க மரியாதையோடு வீட்டுக்கு அனுப்பினார்.

இமாம் அபூ ஹனீபாவை வஞ்சம் தீர்த்தவர், மதீனாவில் தான் செய்து கொடுத்த விசுவாசப் பிரமாணத்தைப் புறக்கணித்து, தம் ஆட்சியை நிலைநிறுத்த சகல வழிமுறைகளையும் கையாண்டவர் இமாம் மாலிக்கிடம் மனமாறுதல் கொண்டவராக நடந்ததற்குக் காரணமுண்டு. இமாமவர்களை ஜஃபர் துன்புறுத்தியதற்கும் மன்ஸூரின் முழு ஆதரவுமிருந்தது. எனினும், வேறு காரணங் களுக்காக அவரைப் பதவி நீக்கம் செய்து விட்டு, இமாமவர்களை இம்சித்ததற்காகவே அவரை நீக்கியதாகக் கூறிவிட்டார். மக்கா மதீனாவாசிகள் தம்மை விரும்பவில்லை என்பதை அவர் அறிவார்.

எனவே, இமாம் மாலிக் தமக்கெதிராக எடுத்த நடவடிக்கை களையெல்லாம் மறந்துவிட்டது போல் காட்டி, அவர்களுக்கு மரியாதை காட்டியதன் மூலமும் ஹரமைன் வாசிகளின் அன்பைப் பெற்று விடவும், உலகினர்முன் தம்மை நல்லவர் என்று காட்டிக் கொள்ளவும் முயன்றார். எப்படியோ, கடைசிவரை இமாமவர்களிடம் அவர் பகிரங்கமான அன்பும் மரியாதையும் காட்டியது மட்டும் உண்மை யாகும். மேலும், அவர் ஜஃபருக்குப் பதிலாக இமாம் ஹஸனின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரையே மதீனாவின் நிர்வாக அதிகாரி யாகவும் நியமித்தார்.

இந்தத் தடவை ஒரு நாள், இமாமவர்கள் மஸ்ஜிதுந் நபவியிலிருந்தபோது மன்சூர் அவர்களைக் கண்டு பேசினார். அப்போது அவர் தமது குரலை உயர்த்திப் பேசவே, 'நபி பெருமானார் சப்தத்துக்குமேல் அதிகமாக உங்கள் குரலை உயர்த்திப் பேச வேண்டாம்!' என்ற கருத்துள்ள வசனத்தை ஓதிக்காட்டி, அவருடைய சப்தத்தை அடக்கிவிட்டார்கள். இமாம் மாலிக்கின் கலாஞானபோதத் திறனையும், மேதைமையையும், நபி பெருமானார் மீது அவர்கள் கொண்டிருந்த பவித்திரமான அன்பையும் கண்டு, உலகிலுள்ள முஸ்லிம்களின் மார்க்க வழிகாட்டியாக விளங்கக்கூடிய ஹதீஸ்-பிக்ஹு நூல் ஒன்றை ஆக்கித் தரும்படி இவர் கேட்டிருக்கிறார். இதை ஒட்டி வேலை தொடங்கி இமாமவர்கள் பல ஆண்டுகள் கஷ்டப்பட்டு எழுதிய நூல்தான் உலகப் புகழ் பெற்ற 'கிதாபுல் முஅத்தா' ஆகும்.

ஹஜ்ஜுக் காலத்தில் உலகின் பல பாகங்களிலுமுள்ள உலமாக்க ளெல்லாம் ஹஜ்ஜுக்காக மக்காவில் வந்து கூடுவர். இவர்களில் பலர் மார்க்கத் தீர்ப்பு வழங்குவதிலும் முனைந்து விடுவர். எனவே, அந்தச் சமயங்களில் இமாம் மாலிக்கும், இப்னு அபீ திஃபும் தவிர வேறு யாரும் மார்க்கத் தீர்ப்பு வழங்கக்கூடாது என்று கலீபா உத்தரவிட்டார். இமாமவர்கள் காலமாகும் வரை இதுவே அமலிலிருந்து வந்தது.

ஹிஜ்ரி 158 துல் ஹஜ்ஜு மாதம் ஆறில் கலீபா மன்சூர் ஹஜ்ஜுக்கு வந்து கொண்டிருந்தபோது, மக்காவுக்குக் கொஞ்ச தூரத்திலேயேயுள்ள பீர் மைமூனா என்ற இடத்தில் காலமாகி அங்கேயே அடக்கமானார். அவருடைய மகன் முஹம்மது அல் மஹ்தி கலீபாவானார். இவர் ஹிஜ்ரி 160இல் ஹஜ்ஜுக்கு வந்தார். இவர் மதீனாவை நெருங்கியதும், இமாம் மாலிக் உட்பட நகரிலிருந்த பிரமுகர்கள் இவரை எதிர்சென்று அழைத்து வந்தனர். அவர்களிடையே இமாமவர்களைக் கண்ட மஹ்தி, அவர்களுக்கு ஸலாம் சொல்லிக் கொண்டு, அவர்களைக் கட்டியணைத்துத் தமது அன்பைத் தெரிவித்துக் கொண்டார். அச்சமயம் ஹிஜாஸில் கடுமையான பஞ்சம் தலைவிரித்தாடிற்று. அதைக் கலீபாவுக்கு நினைவுபடுத்தக் கருதிய இமாமவர்கள், அவரை நோக்கி, "அமீருல் மூமினீன்! நீங்கள் இப்போது போய்க்

கொண்டிருக்கும் புண்ணிய பூமியில் முஹாஜிர், அன்சார் குடும்பத்தினர் வாழுகின்றனர். இவர்கள் மஸ்ஜிதுந் நபவியின் நிழலில் தங்கியிருக்கின்றனர்" என்று கூறி வறுமையைச் சமிக்ஞையாகக் காட்டினார்கள். உடனே மஹ்தி அதைப் புரிந்து கொண்டு இமாமவர்களிடம் இருபத்தைந்து லட்சம் திர்ஹம்களை ஒப்படைத்து அதை அவர்களிடம் பங்கிட்டு விடுமாறு கூறினார். அதை ஏற்றுக் கொண்ட இமாமவர்கள், தங்களுடைய நம்பிக்கைக்குரிய மாணவர்கள் மூலம் அதைப் பஞ்சத்தில் வாடியவர்களிடையே வினியோகித்து விட்டார்கள்.

இதன்பின் மஹ்தி தமது சொந்தத் தூதரான ரபீஉ என்பவரிடம் மூவாயிரம் தீனார்களை அனுப்பி, அதை இமாமவர்களிடம் கொடுத்து, அவர்களைப் பக்தாதுக்கு அழைக்குமாறு கூறி அனுப்பினார். அந்தப் பணப்பையை இமாமவர்கள் முன்னர் வைத்த ரபீஉ கலீபாவின் அழைப்பை அவர்களிடம் தெரிவித்தார். "ரபீஉ, நீர் கொணர்ந்த பணப்பையை வேண்டுமானால் திரும்ப எடுத்துச்சென்று உங்கள் எஜமானரிடம் ஒப்படைத்துவிடும். நான் மட்டும் பக்தாத் வர முடியாது" என்று கூறிவிட்டு, "அவர்கள் மட்டும் மெய்யாகவே தெரிந்து கொண் டிருப்பார்களானால் மதீனாவே அவர்களுக்குச் சிறந்த புண்ணிய பூமியாகும்" என்ற ஹதீஸையும் இமாமவர்கள் ஓதிக் காட்டினார்கள்.

இந்தச் செய்தியை அறிந்த கலீபா மஹ்தி, அப்படியானால் அவர்களைத் தமது சபைக்காவது அழைத்துவர வேண்டும் என்று கூறி அவர்கள் ஏறிவருவதற்காக உயர் ஜாதிக் குதிரை ஒன்றையும் அனுப்பினார். அதில் ஏறிக்கொண்டு அவர்கள் கலீபாவின் சபைக்கு வர வேணும் என்று அந்தத் தூதர் மீண்டும் வந்து வேண்டியபோது, "நான் மதீனாவில் எங்குமே வாகனத்தில் ஏறிப் போக மாட்டேன். ஏனெனில், இதே தெருக்களில்தான் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கால்நடையாகவே நடந்து சென்றுள்ளார்கள்" என்று பதிலளித்து விட்டார்கள்.

பின்னர், கலீபா மஹ்தி இமாமவர்களின் கலாஞான வகுப்பில் வந்திருந்து அவர்கள் பாடம் நடத்துவதைக் கேட்டுச் சென்றார் என்று

சொல்லப்படுகிறது. ஹிஜ்ரி 169-இல் இந்த மஹ்தி வேட்டைக்குச் சென்ற இடத்தில், விபத்துக்குள்ளாகி மாண்டு விட்டார். உடனே அவருடைய மூத்த புதல்வர் மூஸா என்ற ஹாதி கலீபாவாகி இரண்டாண்டுகளுக்கும் குறைவாகவே ஆட்சி செய்தார். இவருக்குப்பின் உலகப் புகழ் பெற்ற கலீபா ஹாரூனர் ரஷீது 170-இல் கலீபாவாகப் பட்டமேற்றார். இவருடைய நேர்மையும், அன்பும், ராஜதந்திரமும், அறிவாற்றலும் தான், உலகிலேயே இவருக்குத் தனியானதோர் இடத்தைப் பெற்றளித்துள்ளது.

பட்டமேற்ற ஆண்டிலேயே இவர் ஹஜ்ஜு செய்வதற்காக ஹிஜாஸ் வந்தார். இவர் மதீனா வந்தபோது நகரப் பிரமுகர்கள் நகருக்கு வெளியிலும் நடந்தே சென்று, இவரை வரவேற்றனர். இமாமவர்கள் நகருக்கு வெளியில் வந்து, ஒரு வாகனத்திலேறிக் கொண்டு போய் ஹாருனை வரவேற்றார்கள். இமாமவர்களைக் கண்டதும் ஹாருன் மிகவும் மகிழ்ச்சியோடு அவர்களருகில் சென்று, "இமாமவர்களே, நீங்கள் கொடுத்துவரும் விளக்கங்களெல்லாம் எழுதப்பட்டு அடிக்கடி எங்களுக்கு வருகின்றன. நாங்கள் ஆவலோடு அவற்றைப் படிக்கிறோம். எங்கள் குடும்பத்தார் யாவரையுமே அவற்றைப் படிக்கும்படி உத்தரவிட்டுள்ளோம்" என்று கூறினார். பின்னர், "ஆமாம், அந்த விளக்கங்களில் ஹஜ்ரத் அலீ (ரலி), ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் 'ரிவாயத்து' ஒன்றைக்கூடக் காண வில்லையே, யாது காரணம்?" என்று வினவினார். அதற்கு "இந்த இரண்டு பெரியார்களும் எங்கள் நகரில் இருக்கவில்லையே, அதுதான் காரணம்" என்று இமாமவர்கள் பதிலளித்தார்கள்.

ஹாருன் மதீனா வந்த சமயம் இமாமவர்களின் 'முஅத்தா' பூர்த்தியாகி விட்டது இதைக் கேள்வியுற்ற கலீபா இமாமவர்களை அழைத்து, அதைத் தமது சபையில் விளக்கச்செய்ய வேண்டுமென்று நினைத்தார். எனவே, 'முஅத்தா' வை எடுத்துக்கொண்டு அவர்களை அங்கே வருமாறு அழைத்தார். அது கேட்ட இமாமவர்கள், "மனிதர் கள்தான் கல்வி ஞானத்தைத் தேடி வரவேண்டுமே அன்றி கல்வி ஞானம் மனிதர்களைத் தேடிப் போகாது" என்று கூறிவிட்டார்கள்.

அப்படியாயின் இமாமவர்கள் வெறுமனேயாவது தமது சபைக்கு வந்து போக வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். அதை மறுக்க முடியாத இமாமவர்கள், அவருடைய சபைக்குப் போனார்கள்.

அங்கே கலீபாவோடு வந்திருந்த இமாம் அபூ யூஸுபும், கலீபாவின் இரண்டு புதல்வர்களான அமீனும், மாமூனும் அவரோடு அமர்ந் திருந்தனர். இமாமவர்கள் வந்ததும் கலீபா, அவர்களைத் தங்கள் அருகே அமர்த்தி அவர்களோடு அளவளாவினார். அச்சமயம் நபி பெருமானார் 'பித்ரா' அளந்த மரக்காலின் கனம் என்ன என்ற சர்ச்சை உண்டாயிற்று. இமாம் அபூ யூஸுப் ஆறு ராத்தல் என்றார்கள். இமாம் மாலிக் ஐந்து ராத்தல் என்றார்கள். நபிபெருமானார் பித்ரா அளந்த மரக்கால் அப்போது மதீனாவில் ஓரிடத்தில் இருந்தது. அதை எடுத்து நிறுத்துப் பார்க்கச் சொல்லவே, அது சரியாக ஐந்து ராத்தலே இருக்கக் கண்டனர். பின்னர், கலீபாவின் வேண்டுதல்படி, அபூ யூஸுப், இமாம் மாலிக்கிடம் ஒரு கேள்வி கேட்டார்கள். அதாவது, "ஹஜ்ஜுக்காக இஹ்ராம் கட்டிய ஒருவன், தன் சட்டையணிந்த கையினால் மானுடைய சட்டிப் பல்லை அடித்து உடைத்துவிட்டால், அவன் கொடுக்க வேண்டிய அபாரதமென்ன?" என்று. "ஓர் ஆடு அறுத்துக் கொடுக்க வேண்டும்" என்று இமாம் மாலிக் பதிலளித்தார்கள். உடனே அபூ யூஸுப் கேட்டார்கள், "இஹ்ராம் கட்டியவன் சட்டை போடுவானா? மானுக்குச் சட்டிப் பல்தான் உண்டா?" என்று கேட்டார். இமாம் மாலிக் பதிலளித்தார்கள். "அமீருல் மூமினீனுடைய சபையில் நீங்கள் ஒழுங்கான கேள்வி கேட்பீர்கள் என்று எண்ணித்தான் பதிலளித்தேன். எனினும், இஹ்ராம் கட்டத் தையலில்லாத துணியே இல்லாதவன், வேறு நிவர்த்தியற்ற நிலையில், சட்டை போட்டுக் கொள்வது ஆகுமல்லவா! மனிதன் கையில் ஆறாவது விரலையும், அதிகமான உறுப்புக்கள் சிலவற்றையும் படைக்கும் இறைவன் மானுக்குச் சட்டிப்பல்லைப் படைப்பது பெரிய காரியமா! இவ்விதம் இவ்விரண்டும் உண்டாக இடமிருப்பதால்தான் நான் அதற்கு அப்படி விடை தந்தேன்" என்றார்கள்.

இமாம் அபூ யூஸுப் இப்படிக் கேள்வி கேட்டதால் இமாம் மாலிக்கின் மேதையை அவர்கள் அறிந்திருக்கவில்லை என்றோ, அவர்கள் மீது பொறாமை கொண்டதாலோ என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. இமாம் மாலிக்கிடம் அவர்கள் அதிகமும் மதிப்பு வைத்திருந்தார் கள். அவர்களுடைய மேதைமையைக் கலீபாவுக்கு உணர்த்துவதற்காகவே அவர்கள் இவ்விதம் அவர்களிடம் வினா விடுத்தார்கள்.

இதன் பின்னர் கலீபா ஹாரூன் மறு நாள் இமாமவர்களின் கலா ஞான வகுப்புக்குப் போய், அவர்களுடைய 'முஅத்தா' வுக்கான விளக்கத்தைக் கேட்க நாடினார். அவர் வருவதால் மற்ற மாணவர் களும், பொது மக்களும் அங்கே வராமலிருந்தால் நலமாகும் என்று அவர் தெரிவித்தார். இமாமவர்கள் அதற்கு இணங்கவில்லை. ஹதீஸ் வகுப்பு யாவருக்கும் பொதுவானது. அதில் இப்படி ஒரு நிமிடம் கூட மற்றவர்கள் வந்து அமர்வதைத் தாம் தடுக்க முடியாது என்று கூறி விட்டார்கள். அதை ஏற்றுக்கொண்ட கலீபா, மறுநாள் குறித்த சமயம் இமாமவர்களின் ஹதீஸ் வகுப்புக்குச் செல்வதற்காகத் தம்முடைய வாகனம் முதலியவைகளை ஆயத்தம் செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அதைக் கேட்ட இமாமவர்கள், ''அமீருல் மூமினீனே, ''கல்வி தேடிப் பணிவுடன் செல்பவர்களுக்கு அமரர்கள் தங்கள் இறக்கைகளைத் தாழ்த்தித் தருகின்றனர்'' என்று எம்பெருமானார் அருளிய திருமொழியை ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு உமர் அறிவித்துள்ளார்கள். எனவே, உங்கள் வாகனம் முதலிய ஆடம்பரங்களையும் கொஞ்சம் ஒதுக்கிவிட்டு நடந்தே வருவது சிறப்பு டைய செயலாகும்; அதனால் கிடைக்கும் உண்மையான பெருமைக்கும் உடையவர்களாவீர்கள்'' என்று கூறினார்கள். கலீபா அதையும் ஏற்றுக் கொண்டார்.

மறுநாள் இமாமவர்களின் கலாஞான மன்றத்தில் பாடம் தொடங்கு முன்னமேயே, வழக்கம்போல் தூபம் முதலிய வாசனைகள் பரிமளிக்க, யாவரும் அமர்ந்திருந்தனர். கலீபா தமது இரண்டு புதல்வர்

களோடும் சபையில் நுழைந்து, இமாமவர்களுக்குப் பக்கமாக இருந்த உயரமான ஆசனம் ஒன்றில் அமரலானார். இதைக் கண்ட இமாமவர்கள் அவரை வினயத்தோடு விளித்து, 'அமீருல் மூமினீன்', என்று மக்கள் பணிவையும், அடக்கத்தையும் விரும்புவார்கள்'' என்று கூறவே அவர் யாவரோடும் வந்து அமர்ந்து கொண்டார்.

'முஅத்தா' வின் விளக்கமான பாடம் நடந்தது. ''இமாமவர்களே, நீங்களே அதைப் படித்து விளக்கம் தாருங்கள்'' என்று அவர் இமாமவர்களிடம் வேண்டினார். அவர்களோ, ''அது வழக்கத்துக்கு விரோதமாகும்'' என்று கூறிவிட்டு, எதிரிலிருந்த மயீன் பின் ஈசா என்ற மாணவரை சமிக்ஞை செய்ததும், அவர் படித்துக்கொண்டே போனார். இமாமவர்கள் விளக்கம் கொடுத்துக் கொண்டே வந்தார்கள். கலீபாவும், அவர்களுடைய புத்திரர்களிருவரும் அதை மிகவும் பயபக்தியுடன் அமர்ந்து கேட்டனர்.

இக்காலையில் உலகம் முழுமையிலுமுள்ள உலமாக்கள் பலர் ஹஜ்ஜுக்கு வந்தவர்கள் மதீனாவிலும் வந்து குழுமினர். இதைப் பயன் படுத்திக் கொள்ள எண்ணிய கலீபா ஹாரூனர் ரஷீது உலமாக்கள் அனைவரையும் ஒரு சபையில் கூட்டி, அங்கே இமாம் மாலிக்கை, 'முஅத்தா' விலிருந்து பாடம் நடத்த ஏற்பாடு செய்தார். இமாமவர்களும், ஒவ்வொரு 'மஸ்அலா' வாக விளக்கிக்கொண்டு வந்தார்கள். கூடியிருந்த உலமாக்கள் அனைவரும் எந்த ஆட்சேபமும் எழுப்பாமல், மிகுந்த மரியாதையோடு அதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். இமாமவர்கள் கொடுத்துவந்த விளக்கம் 'பிக்ஹு'க் கலையின் கடல்தான் தன் அலைகளைக் கரையில் மோதுகிறதோ என்று எண்ணும் அளவுக்கு அற்புதமானதாக இருந்தது. விளக்கம் முடிந்ததும், சபை கலைந்து இமாமவர்கள் எழுந்து தங்கள் இருப்பிடம் சென்று விட்டார்கள். உடனே, ஹாரூனர் ரஷீது, மற்ற உலமாக்களை நோக்கி, ''ஹே ஹிஜாஸ், இராக் புகஹாக்களே, இமாம் மாலிக் அவர்கள் நம்முன் விளக்கிய 'மஸ்அலா' க்களில் உங்களுக்கு ஆட்சேபமுண்டா?'' என்று கேட்டார். உலமாக்கள் அனைவரும் ''ஒரே ஒரு 'மஸ்அலா'வைத் தவிர

மற்றவற்றில் தங்களுக்கு ஆட்சேபமில்லை-அபிப்பிராயபேதமும் இல்லை" என்று கூறிவிட்டனர். உடனே, கலீபா, இமாமவர்களை மீண்டும் சபைக்கு அழைத்து வருமாறு கூறினார். அவர்கள் வந்து சேர்ந்ததும், 'முஅத்தாவிலிருந்து நீங்கள் எடுத்து விளக்கிய மஸ்அலாக் களில் ஒன்றை மட்டும் இந்த உலமாக்கள் ஏற்க மறுக்கின்றனர். நான் அதையும் ஏற்கிறேன். எனவே, அதற்கும் திருக்குர்ஆன் ஹதீஸிலிருந்து சரியான ஆதாரம் காட்டிவிடுங்கள்'' என்று அவர்களிடம் கூறினார். உடனே இமாமவர்கள் அந்த 'மஸ்அலா'வுக்குத் திருக்குர்ஆனி லிருந்தும், ஹதீஸிலிருந்தும் ஆதாரங்காட்டி, அந்த உலமாக்களைத் திருப்திப் படுத்திவிட்டார்கள்.

இமாமவர்களின் 'முஅத்தா' வின் பெருமையைக் கண்டு கொண்ட ஹாரூனர் ரஷீது, அதையே சகல பகுதிகளிலுமுள்ள முஸ்லிம்கள் ஷரீஅத்தின் சட்ட திட்டமாக ஏற்றுக் கொள்வதற்கான நூலாக ஆக்கி, கஃபத்துல்லாஹ்விலும் அதை வைப்பதுடன், உலகின் பல பகுதிகளுக்கும் அதிலிருந்து பிரதிகளெடுத்து அனுப்பிவிடலாம் என்று தாம் நினைப்பதாக அவர்களிடம் தெரிவித்தார். இமாமவர்கள் அதற்கு இணங்க மறுத்துவிட்டார்கள். (ஹாரூனுக்கு முந்திய கலீபாக்கள் இவ்விதம் இமாமவர்களிடம் வேண்டுகோள் விடுத்ததாகச் சில நூற்களில் காணப்படுகிறது. ஆனால், இந்தப் பாரதூரமான நூலை இமாமவர்கள் முடித்தது ஹாரூன் பட்டமேற்ற சமயத்தில்தான் என்பது பல சம்பவங்களால் உறுதியாகிறது.)

மதீனாவின் மஸ்ஜித் நபவியில் நபிபெருமானார் (ஸல்) அவர்கள் நின்று குத்பா ஓதிய, மரத்தாலாகிய மிம்பரில் முதல் மூன்று படிகள்தாம் இருந்தன. பின்னர் முஆவியா தமது ஆட்சிகாலத்தில் அத்துடன் இன்னும் படிகளைச் சேர்த்துக் கட்டிவிட்டார். இதைக் கண்ட கலீபா ஹாரூனர் ரஷீது முஆவியா அதிகமாகக் கட்டிய படிகளை இடித்துத் தள்ளிவிட்டு, நபிபெருமானார் காலத்திலிருந்த மூன்று படிகளை மட்டும் வைத்து விடலாம் என்று எண்ணி இமாமவர்களிடம் யோசனை கேட்டார். அதற்கு இமாமவர்கள், ''அவ்வாறு செய்து விடாதீர்கள்!

ஏனெனில், இந்த மிம்பரின் மரப்பகுதிகள் மிகவும் சிதிலமாகி இருக்கின்றன. இந்த நிலையில் அதை மராமத்து வேலைக்காக இப்படியும் அப்படியும் அசைத்தால் பழைய படிகள் உடைந்து போகலாம். மேலும், நபிபெருமானார் (ஸல்) அவர்கள் காலமானபோது இந்த மிம்பரும், விரிப்பும், குவளையும், அசாவெனும் தடியும், பெருமானாரின் உரோமங்கள் சிலவும் இருந்தன. இன்றோ, இந்த மரப்படிகளைத் தவிர மற்ற யாவையும் இந்த மதீனா இழந்துவிட்டது. எஞ்சியுள்ள இந்த மரப்படிகள் பெரியவனாய் இருப்பதால் இங்கிருந்து இவற்றை யாரும் நகர்த்திச் செல்லவில்லை. இந்த நிலையில் நீங்கள் இவற்றை மீண்டும் சிறிதாக்கினால், சிறிது நாட்களுக்குள் இந்தப் புண்ணியமிக்க மிம்பர்படி மஸ்ஜித் நபவியை விட்டும் வெளியாகி எந்த ஆட்சியாளருடைய கொலுமண்டபத்தையாவது அலங்கரிக்கப் போய் விடும்'' என்று விளக்கினார்கள். உடனே, கலீபா மிம்பரை மராமத்துப் பார்க்கும் தமது எண்ணத்தையே கைவிட்டுவிட்டார்.

ஹாரூனர் ரஷீது இமாமவர்களிடம் மிகுந்த மரியாதையும் மதிப்பும் வைத்திருந்தது போலவே, இமாமவர்களும் அவருக்கு நல்ல படியான உபதேசங்களை அருளிவந்தார்கள். பின்னர் இமாமவர்கள் பக்தாதிலிருந்து ஹாரூனுக்கு நீண்ட கடித உருவில் பல உபதேசங் களை எழுதி அனுப்பினார்கள். அதில் அவர் சுன்னத்தைப் பின்பற்றி ஒழுகவேண்டிய அவசியத்தை வற்புறுத்தியிருந்தார்கள். (இந்தக் கடிதம் சமீபத்தில் எகிப்தில் அச்சாகியுள்ளது. இதன் உர்து மொழிபெயர்ப்பு லாகூரில் வெளியாகியுள்ளது.)

மறைவும், குணநலனும்

இமாமவர்கள் தங்கள் எண்பத்தோராம் வயதில் மிகவும் தளர்ச்சி அடைந்தவர்களாக ஆகிவிட்டார்கள். அதனால் அவர்கள் மஸ்ஜிதுக்கு வந்து தொழவோ, சுப, அசுப காரியங்களில் கலந்து கொள்ளவோ முடியாதவர்களாக இருந்தார்கள். இதுபற்றி மக்களுக்குக் குறைதான். ''நீங்கள் ஏன் எதிலும் கலந்து கொள்வதில்லை?'' என்று யாரேனும் அதுபற்றி கேட்டால், ''நான் என் தள்ளாமையை யாரிடமும் சொல்லிக்

கொள்வதில்லை'' என்று கூறிவிடுவார்கள். இமாமவர்களின் நெருங்கிய மாணவரான மஃன் பின் ஈஸா என்பவர் இமாமவர்களுக்குச் சேவை செய்யும் பொறுப்பைத் தாமே ஏற்று, இரவு பகலாக அவர்களைக் கவனித்து வந்தார். அவர்கள் எழுந்து நடக்க விரும்பினால், இவரைப் பற்றிப் பிடித்துக் கொண்டே நடப்பார்கள். இந்த வயதிலும் அவர்கள் பாடபோதனை செய்வதை மட்டும் விடாது செய்து வந்துள்ளார்கள்.

கடைசியில், சில நாட்கள் அவர்கள் படுத்த படுக்கையாகவே இருந்து, ஹிஜ்ரி 179 ரபீஉல் அவ்வல் மாதம் பதினான்காம் நாள் அதிகாலை வேளையில், அவர்களுடைய பரிசுத்தமான ஆவி, அவர்கள் பூத உடலைவிட்டுப் பிரிந்து, தன்னைப் படைத்த இறைவனைச் சந்திக்கப் போய்விட்டது. அப்போது அவர்கள் வயது எண்பத்து ஆறு. சுமார் ஐம்பத்து ஆறு ஆண்டுகள் இமாமவர்கள் எம்பெருமானாரின் நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டே போதனையை நடத்தி, இஸ்லாமிய உலகுக்குச் சிறப்பான சேவை செய்துள்ளார்கள்.

இமாமவர்களின் பூத உடல் நல்லடக்கம் செய்யப்பட்ட போது ஒரு மாபெரும் மக்கள் சமுத்திரமே திரண்டு வந்திருந்தது.

மதீனாவின் நிர்வாக அதிகாரியான அப்துல்லாஹ் ஹாஷிமி என்பவரும் வெறும் காலுடன் வந்திருந்து ஜனாஸாவைச் சுமப்பதில் தோள் கொடுத்தார். ஹஜ்ரத் ஆயிஷா நாயகி, ஹஜ்ரத் உதுமான் (ரலி), இமாம் ஹஸன் (ரலி), ஹஜ்ரத் பாத்திமா, ஹஜ்ரத் ஹப்ஸா போன்ற உத்தமப் பெருமக்களின் பூத உடல் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள ஜன்னத்துல் பகீயில் இமாமவர்களின் பூத உடலும் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இமாமவர்கள் காலமானபின்னர் பிஷ்ரிப்னு பக்ரின் என்ற பெரியார் அவர்களைக் கனவில் கண்டு, ''இமாமவர்களே, உங்களை அல்லாஹ் எவ்விதம் நடத்தினான்?'' என்று கேட்டார். அதற்கு அவர்கள், ''அல்லாஹ் என் பிழைகளை மன்னித்தான்'' என்று பதிலளித்தார்கள்.

எந்த அமலுக்காக என்று கேட்கப்பட்டபோது, ஜனாஸாவைக் காணுந் தோறெல்லாம், ஹஜ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் 'சுப்ஹானல்லாஹில் ஹையுல் கையூமில்லத்தீ லாயமுத்து' என்று ஓதுவார்கள். அதுபோல நானும் ஓதியதன் மகிமையால்'' என்று பதிலளித்தார்கள்.

இமாமவர்கள் உயரமான உருவமும், சிகப்பும் வெண்மையும் கலந்த நிறமும், அகன்ற நெற்றியும், பெரிய கண்களும், எடுப்பான மூக்கும் உடையவர்கள். அவர்களுடைய தாடி நீண்டிருந்தது. அளவோடு வளர்த்த மீசையிருந்தது. தலைமுடி குறைவாகவே இருந்தது.

இமாமவர்கள் சுத்தமான உயரிய உடையையே விரும்பி அணிவார்கள். "நீங்கள் விலையுயர்ந்த உடைகளையே அணிகிறீர்களே!'' என்று யாரேனும் வினவினால், "ஆம், இந்த நகரத்து உலமாக்களைப் போலவே நானும் விலையுயர்ந்த உடைகளை உடுத்துகிறேன்'' என்று பதிலளித்துவிடுவார்கள்.' தங்களுக்குத் தேவையான உடைகளை அவர்கள் மிகுந்த கவனமாகத் தயாரிப்பார்கள். அதற்காக மெர்வ் ஆகிய நகரங்களில் வரும் விலை உயர்ந்த துணிகளையே அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

இமாமவர்கள் உயர்தரமான அத்தர்களையும் அதிகமாகப் பூசிக் கொள்வார்கள். தெருவில் அவர்கள் நடந்து சென்றால், அவர்கள் போன பின்னும் நீண்ட நேரம் அந்த மணம் கமழ்ந்து கொண்டிருக்கும். அவர்கள் இருக்குமிடத்தில் வாசனை வத்திகள் புகைந்து கொண்டிருக்கும். அவர்கள் நீண்ட குஞ்சம் விட்டுத் தலைப்பாகை கட்டுவார்கள். அந்தக் குஞ்சத்தை வலப்பக்கம், அல்லது இடப்பக்கத் தோள் மீது தூக்கிப் போட்டுக் கொள்வார்கள். தைலஸான் என்ற விலை உயர்ந்த சால்வையையும் அவர்கள் மேலே போர்த்துக் கொள்வதுண்டு. அவர்களுடைய விரலில் வெள்ளி மோதிரம் ஒன்று கிடந்தது. அதில் பதிக்கப்பட்ட கறுப்புக் கல்லில் 'வநிஃமல் வகீல்' என்ற எழுத்துக்கள் செதுக்கப்பட்டிருந்தன.

இமாமவர்கள் பிரபல ஸஹாபியான, ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு மஸ்வூதின் வீட்டையே விலைக்கு வாங்கி, அதில் வாழும் பாக்கியம்

பெற்றார்கள். மேலும், இமாமவர்கள் கலாஞானபோதமளித்த தலமாக விளங்கியது ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் வாழ்ந்த இல்லமாகும். அங்குதான் இமாமவர்களின் 'முஅத்தா' முதலிய நூற்கள் உருவாயின.

இமாமவர்கள் காலையில் சுப்ஹுத் தொழுதபின் சூரியோதயம் வரை பல வஜீபாக்களையும், ஔராதுகளையும் ஓதிக் கொண்டிருப் பார்கள். அவர்கள் வெளியில் வந்ததும் பலரும் அவர்களைக் காண வருவார்கள். சிறிது நேரம் யாவருடைய சுக நலங்களையும் விசாரித்து அளவளாவுவார்கள். பின்னர் கலாஞான வகுப்பு நடத்த விரைவார்கள், இமாமவர்கள் கூறும் ஹதீஸ்களை எழுதி வைக்கும் பணியை இப்னு ஹபீப் செய்து வந்தார். சபையில் எழுந்து நின்று படிக்கும் பணியைப் பெரும்பாலும் மஅன் பின் ஈஸா, யஹ்யா பின் ஸலாம் ஆகிய இருவரும் செய்துவந்தனர். இரவில் பெரும் பகுதியை இமாமவர்கள் வணக்கத்திலேயே கழிப்பார்கள்; திருக்குர்ஆனை ஓதுவார்கள். இமாமவர்கள் வெள்ளிக்கிழமை இரவு முழுவதும் இபாதத்திலேயே மூழ்கிவிடுவார்கள் என்று அவர்களுடைய மகள் தெரிவித்துள்ளார்.

நபிபெருமானார் (ஸல்) அவர்களிடம் இமாம் மாலிக் மிகுந்த பயபக்தியுடையவர்களாக இருந்தார்கள். பெருமானாரின் பெயரை உச்சரிக்கும்போதுகூட அவர்கள் குரல் கம்மும். மஸ்ஜித் நபவியில் 'ரௌலா அன்வர்' என்றோர் அறையுண்டு. அதில் அமர்ந்து கொண்டு யாரும் இரைந்து பேசுவதை அவர்கள் அனுமதிப்பதில்லை. அதனால், பெருமானாரையே அவமதிப்பதாகும் என்று சொல்வதுண்டு. அவர்களிடம் எத்தனையோ அருமையான குதிரைகளும், கோவேறு கழுதைகளும் இருந்தும், எம்பெருமானாரின் திருப்பாதம் பட்ட அந்தப் புனித நகருக்குள் எந்த வாகனத்தின் மீதும் அவர்கள் சவாரி செய்து போனதே இல்லை. நபிபெருமானாரின் ஹதீஸ்களைத் தகாத இடங்களிலோ, அவசர அவசரமாகவோ, இரைச்சல் போட்டோ, நடந்து கொண்டோ பாடம் நடத்தவே மாட்டார்கள். அவர்கள் நபி பெருமானாரை அடிக்கடி தங்கள் கனவில் கண்டு வந்துள்ளார்கள்.

இதுபோன்றே மதீனா மீதும் அவர்கள் அளப்பரிய அன்பு கொண்டிருந்தார்கள். ஹஜ்ஜுக்காகவன்றி அவர்கள் மதீனாவை விட்டு எங்கும் போவதே இல்லை. ஆட்சியாளர்கள் அவர்கள் எவ்வளவோ ஆசை வார்த்தை காட்டிப் பக்தாதுக்கு அழைத்தும் கூட அவர்கள் மதீனாவை விட்டும் வெளிப்பட முடியாது என்று கூறிவிட்டார்கள்.

விருந்தோம்பிகள் சிறந்த அரபிகளிடையே இமாமவர்களின் விருந்தோம்பல் பலவகையிலும் சிறப்பு வாய்ந்ததாகும். விருந்தினருக்கு விசேஷமான உணவு வகைகளைத் தயாரித்து வைத்துக் தங்கள் கையாலேயே பரிமாறி உபசரிப்பார்கள். இமாமவர்களின் விருந்தோம்பலைப் பற்றி இமாம் ஷாபியீ பெரிதும் புகழ்ந்து பேசியுள்ளார்கள்.

இமாம் அபூ ஹனீபாவைப் போலவே, இமாம் மாலிக்கும் பெரிய கொடை வள்ளலாக இருந்தார்கள். உலகின் பல பாகங்களிலுமிருந்து ஹஜ்ஜுக்கு வரும் ஆட்சியாளர்கள், பிரபுக்களெல்லாம் இமாமவர் களுக்குப் பெருந்தொகை அன்பளிப்பாகக் கொடுப்பதுண்டு. அவைகளை உடனே உலமாக்களுக்கும், ஏழைகளுக்கும் பங்கிட்டு விடுவார்கள். ஒருசமயம் அவர்களுடைய லாயத்தில் நின்ற குதிரை யொன்றின் சிறப்பைப்பற்றி இமாம் ஷாபியீ, இமாம் அவர்களிடம் புகழ்ந்து பேசியபோது, அந்தக் குதிரையை அவர்களுக்கே அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார்கள். தங்களுடைய மாணவர் பலருக்குக்கூட அவர்கள் ஆண்டுதோறும் உதவித்தொகை அனுப்பி வந்துள்ளார்கள்.

கத்திமுனையிலும் சத்தியத்தையே கூறிய அவர்களுடைய மன உறுதியையும், எழுபது கசையடிகள் பட்ட பின்னரும் உண்மையையே பிரகடனம் செய்த இயல்பையும், கலீபா மன்ஸூர் மரண தண்டனை விதிப்பாரோ என்று எதிர்பார்த்த சமயம் கபன் துணியுடுத்தி அவரின் சபைக்குச் சென்றதையும் எண்ணிப்பார்த்தால் அவர்களுடைய மன உறுதி எத்தகையது என்பது விளங்கும். இத்தகைய உறுதிகொண்ட இமாமவர்கள், ஒரு நாள் ஹதீஸ் போதனா மன்றத்துக்குப் புறப்படும்

போது அவர்கள் காலில் அணிந்த மேஜோடு (ஸ்டாக்கிங்ஸ்)க்குள் தேள் ஒன்று இருந்திருக்கிறது. அதைக் கவனியாமல் அவர்கள் தங்கள் பீடத்தில் அமர்ந்து பாடம் நடத்திய சமயம் அந்தத் தேள் கொட்ட ஆரம்பித்து விட்டது. சபையின் ஒழுங்கு முறையை எண்ணி அச்சமயம் தங்கள் வேதனையைக் காட்டிக் கொள்ளவோ, அவ்விடம் விட்டு எழுந்துபோகவோ முடியாதவர்களாக, அங்கேயே அமர்ந்து வெகு பொறுமையுடன் பாடத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பாடம் முடிக்குமுன் அந்தத் தேள் அவர்களைப் பல தடவை கொட்டிவிட்டது. சபை கலைந்தபின்னரே, அதை அப்புறப்படுத்திவிட்டு, அங்கிருந்து அப்துல்லா ஹிப்னு முபாரக் என்பவர்களிடம் அதைத் தெரிவித்தார்கள்.

இமாமவர்கள் மன்னிக்கும் பண்பிலும் சிறந்தவர்களாகவே நடந்து கொண்டார்கள். தம்மை எழுபது கசையடி அடிக்க உத்தரவிட்டு, ஒட்டகத்தின்மீது ஏற்றி ஊர் சுற்ற வைத்த ஜஃபரையே அவர்கள் மனப்பூர்வமாக மன்னித்து விட்டவர்கள் அவர்கள்.

கற்றோரிடமும், அறிஞர்களிடமும் இமாமவர்கள் அதிக மரியாதை காட்டி வந்துள்ளார்கள். தங்கள் சபையில் உயர்ந்த பீடமொன்றில் அமர முயன்ற கலீபா ஹாரூனர் ரஷீதைக் கீழே இறங்கி அமரச் செய்த இமாமவர்கள் ஒரு சமயம் இமாம் அபூ ஹனீபா தங்கள் சபைக்கு வந்த போது, தாங்கள் மேலே போர்த்தியிருந்த 'தைலஸா' என்ற விலை உயர்ந்த போர்வையை எடுத்துக் கீழே விரித்து அதன்மீது அவர்களைச் அமரச் செய்து மரியாதை காட்டினார்கள். இதுபோன்றே, தமது சபைக்கு வந்த ஸுப்யானுத் தௌரிக்கும் மரியாதை காட்டி வரவேற்றார்கள். தங்கள் சீடர் முஹத்திஸ் கஃனபி தமது ஊரிலிருந்து மதீனா வருகிறார் என்று தெரிந்ததும், இமாமவர்கள் தங்கள் சீடர்களையும் அழைத்துக் கொண்டு போய் அவரை எதிர்கொண்டு வரவேற்றார்கள். எகிப்திலிருந்த தமது மாணவர் அப்துர் ரஹ்மானுக்குக் கடிதம் எழுதும் போதெல்லாம் அவர் பெயரைக் குறிப்பிடாமல், 'பகீஹு மிஸ்ர்' என்றே எழுதுவார்கள்.

தீர்ப்புகள்

இமாமவர்கள் இத்தனை பெரிய அறிவுக் கடலாக இருந்தும் மக்கள் தம்மிடம் கொண்டுவரும் எந்தப் பிரச்சினைக்கும் இலகுவில் தீர்ப்பளித்து விடமாட்டார்கள். முதலில் இமாமவர்கள், 'இது அவ்வளவாக எனக்குத் தெரியாதே!' என்றுதான் பதிலளிப்பார்கள். தங்களை விடப் பெரியவர் யாராவது தீர்ப்பளிக்கட்டும் என்று கூறுவார்கள். சொல்லித்தான் ஆகவேண்டும் என்றிருப்பின், மிகுந்த நிதானமாகவும், ஆராய்ச்சியுடனும் கூடிய தீர்ப்பை வழங்குவார்கள். இமாமவர்கள் 'எனக்குத் தெரியாதே' என்று கூறிய சொற்களை மட்டும் திரட்டினாலே அவை ஒரு பெரிய நூலாக ஆகிவிடும்'' என்று அவர்களுடைய மாணவர் இப்னு வஹப் கூறியுள்ளார்.

வெகு தொலைவிலிருந்தெல்லாம் பல பிரச்சனைகளுக்கு ஃபத்வாக்கள் கேட்டு எழுதுவார்கள். இமாமவர்கள் அவற்றுக்குப் பதிலளிக்கப் பெரிதும் தயங்குவார்கள். ஒரு சமயம் ஒருவர் இமாமவர்களிடம் ஒரு பிரச்சனைக்குப் பதில் நாடியபோது, ''இதற்குச் சரியான பதில் எனக்குத் தெரியாது'' என்று பதிலளித்துவிட்டார்கள். ''இந்தப் பதிலைக் கேட்டுப் போகத்தானா நான் ஆறு மாதங்களாக நடந்து வந்திருக்கிறேன். நான் ஊர் சென்று என்னை அனுப்பி யவர்களுக்கு என்ன பதில் சொல்வேன்?'' என்று அவர் கேட்டதற்கு, ''மாலிக் தனக்குத் தெரியவில்லை என்று கூறிவிட்டார் என்றே தெரிவித்துவிடு!" என்று பதிலளித்து விட்டார்கள்.

இமாமவர்கள் தம்மிடம் தீர்ப்புக் கேட்டுத் தொலைவிலிருந்து வருபவருக்கு இலகுவில் தீர்ப்புக் கூறாத காரணம், அவர்களுடைய பேணுதல்தான். இன்று ஒரு பிரச்சனைக்கு ஒரு பதிலைக் கொடுத்த பின், நாளையே அதைவிட ஆதாரமான நல்ல பதில் புலப்படலாம். எனவே, உள்ளூராகயிருப்பின் உடனே அதை அறிவித்துத் தமது தீர்ப்பை மாற்றிக் கொள்ளலாம். தொலைவிலிருந்து வரும் தீர்ப்புக் களுக்கு இவ்விதம் புதிய முடிவுகள் கிடைப்பின், போக்குவரத்தோ, கடிதம் அனுப்பும் வசதியோ சரியாக இருக்காத முறையில் அவற்றைத்

தெரிவிப்பது சாத்தியமல்லவே! எனவே தான், இமாமவர்கள் வெளியூர்ப் பிரச்சனைகளில் தீர்ப்புக் கொடுக்க பெரிதும் தயங்கியுள்ளார்கள்.

இமாமவர்களின் தீர்ப்புகளில், ''நபிபெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்'' என்ற வாசகம் தான் முதல் வாசகமாக இருக்கும். அவர்கள் தீர்ப்பு வழங்கும்போது, அதற்கு மாற்றமான ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களை யாரேனும் கூறினால் அவர்கள் உடனே அதை ஏற்றுத் தங்கள் தீர்ப்பை மாற்றிக் கொள்வார்கள். ஒரு சமயம் ஒருவர் அவர்களிடம் வந்து, ''ஒலுச் செய்யும்போது கால் விரல் களைக் கோதிக்கழுவ வேண்டுமா?'' என்று கேட்டார். அது அவசியமில்லை" என்று அவர்கள் கூறினார்கள். அச்சமயம் அவர்கள் அருகிலிருந்த சீடர் ஒருவர், ஒலுச் செய்கையில் கால் விரல்களைக் கோதிக் கழுவவேண்டும்" என்பதற்கு ஆதாரமான ஹதீஸ் ஒன்று தம்மிடம் கிடைத்திருப்பதாகக் கூறி, அதைக் கொணர்ந்து காட்டவே, இமாமவர்கள் ஆராய்ந்து அது சரியான ஆதாரமுள்ள ஹதீஸ்தான் என்று முடிவு செய்து தங்கள் தீர்ப்பை மாற்றிக் கொண்டார்கள்.

நூல்கள்

இமாமவர்கள் தங்கள் பாரதூரமான நூலான 'முஅத்தா' வையன்றி மற்றும் பல நூல்களும் எழுதியுள்ளார்கள் என்று சொல்லப் படுகிறது. அவை ரிஸாலா மாலிக்கி, (இத்தகைய ரிஸாலாக்களே பல உள்ளன) இலர் ரஷீது, அஹ்காமுல் குர்ஆன், அல் முதவ்வனா, கிதாபுல் மனாஸிக், தப்ஸீர் கரீபுல் குர்ஆன், கிதாபுல் மஸாயில் முதலியனவாகும்.

மன்னாதி மன்னர்களெல்லாம் வந்திருந்து கேட்டுச் சென்ற 'முஅத்தா' இஸ்லாமிய உலகில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தாகும். அதற்கு இருபத்தைந்துக்கு அதிகமான வியாக்கியானங்களும், இருபது சுருக்கமான நூல்களும், அதிலுள்ள அரும்பதங்களை விளக்கும் நூல்கள் நான்கும் வெளிவந்துள்ளன.

மதீனாவிலுள்ள மார்க்க நடைமுறைப்படியும், எம்பெருமானா ரின் ஹதீஸ் ஆதாரத்தின் மீதும் முஸ்லிம்களின் ஷரீஅத் நடை

முறைகளைத் தொகுத்து எழுதிய இமாமவர்கள் அதற்கு என்ன பெயர் கொடுப்பது என்று சிந்தித்துக் கொண்டிருந்தபோது, நபிபெருமானார் (ஸல்) அவர்கள் இமாமவர்களின் கனவில் தோன்றி, ''இதை மனிதர்களுக்கு மிருதுவான பாதையாக ஆக்கும்!'' என்று கூறினார்களாம். எனவே, இந்த நூலுக்கு திருக்குர்ஆன், ஹதீஸோடு இணைந்த (ஒற்றுமையான) நூல் என்ற பொருளில் **'முஅத்தா'** என்று பெயர் வைக்கப்பட்டது. ஹிஜாஸிலுள்ள மார்க்க கடைப்பிடிப்புகள் திருக்குர்ஆன், ஹதீஸ் அடிப்படையிலிருப்பதை இந்த நூல் நன்கு எடுத்துக் காட்டுகிறது. எனவே, இது ஒரே சமயத்தில் ஹதீஸ் கிரந்தமாகவும், பிக்ஹுக் கிரந்தமாகவும் விளங்கும் சிறப்பைப் பெற்றிருந்தது. "முஅத்தாவில் சகல விஷயங்களிலும் மத்திமமான முடிவு காணப்பட்டிருப்பதாலேயே அது மாபெரும் புகழ் பெற்றது" என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

இமாமவர்களின் பெருமை

இமாமவர்கள் காலத்திலும், அதை ஒட்டியும் வாழ்ந்த பெரியார்கள் பலரும் இமாம் மாலிக்கைப் போற்றிப் பாராட்டியுள்ளனர். ''கலைஞானங்களின் மாமன்னர் மாலிக்'' என்பது யஹ்யாப்னு மயீனின் கருத்தாகும். ''நாங்கள் இமாம் மாலிக்கின் முன் ஒரு வஸ்துவே அல்ல'' என்கிறார் ஸுப்யான் பின் ஐனா. ''இந்தப் பூமியின் மேல்பரப்பிலேயே ஹதீஸ்களின் பாதுகாவலர் இமாம் மாலிக் தான்'' என்பது அப்துர் ரஹ்மான் பின் மஹ்தியின் அபிப்பிராயமாகும். ''ஹதீஸ்கள் என்ற வானத்தில் இமாம் மாலிக் மாபெரும் நட்சத்திரம்'' என்பது இமாம் ஷாபியீயின் கருத்தாகும். ''ஹதீஸ்களை ஆராய்ந்து சுண்டிப் பார்த்தால் இமாம் மாலிக்கைப் போல் புலமையுள்ள யாரையும் நான் காணவில்லை'' என்பது முஹத்திஸ் இப்னு நஹீக்கின் கருத்தாகும். ''நீங்கள் யார் ரிவாயத்துச் செய்த ஹதீஸ்களை அதிகமாக மனனம் செய்வீர்கள்?'' என்று இமாம் அஹ்மதிப்னு ஹன்பலிடம் கேட்கப்பட்டது. ''இமாம் மாலிக் அவர்கள் ரிவாயத்துச் செய்யும் ஹதீஸ்களைத் தான்'' என்று அவர்கள் பதிலளித்தார்கள். ''அல்லாஹ் வின் ஆதாரங்களில் இமாம் மாலிக் ஓர் ஆதாரமாகத்

திகழ்ந்தார்கள்'' என்று இப்னு மயீனும், ''இமாம் மாலிக் இந்த உம்மத்துக்கோர் அருள் மாரியாகும்'' என்று முஹத்திஸ் யஹ்யாவும் கூறியுள்ளார்கள்.

இமாமவர்கள் பெயரால் இன்று நிலவிவரும் மாலிக்கி மத்ஹப், அவர்கள் பெரிதும் பெருமையும் செல்வாக்கும் பெற்றிருந்த ஹிஜாஸ் பகுதியில் அதிகமாக பரவவில்லை. ஆயினும் அவர்களிடம் கற்ற மாணவர்களும், அவர்களுடைய தீர்ப்புக்களையும், விளக்கங் களையும் எழுதித் தொகுத்தவர்களும், மேற்குப் பகுதியில் அதை வெகு வாகப் பரப்பிவிட்டனர். இவ்விதம் முஸ்லிம் ஸ்பெயின் முழுமையிலும் மாலிக்கி மத்ஹபே ஆட்கொண்டிருந்தது. வடமேற்கு ஆப்ரிக்கா விலுள்ள அல்ஜீரியா, தூனிஸ், மொராக்கோ முதலிய நாடுகளிலும் மாலிக் மத்ஹபே மிகப் பெரும்பாலானவர்களால் பின்பற்றப்பட்டது. எகிப்தின் கீழ்ப் பாதியில் ஷாபியீ மத்ஹப் வெகுவாகப் பரவியுள்ளது போல, எகிப்தின் மேல் பாதியில் மாலிக்கி மத்ஹபே பெரும்பாலும் மக்களால் பின்பற்றப்படுவதாக இருக்கிறது.